# பெறுகைகளுக்கான அறிவித்தல்

## வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

## பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவைகளுக்கான பெறுகைகள் – 2020/2021

தலைவர், திணைக்கள பெறுகைக் குழுவினால் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவையை வழங்குவதற்குத் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. தேவையான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| விபரங்கள் | பாதுகாப்பு சேவை | சுத்திகரிப்பு சேவை |
|---|---|---|
| குறியீட்டு இலக்கம் | NP/21/05/Pro/Scty/2020 | NP/21/05/Pro/Clean/2020 |
| வியாபாரப் பதிவு | பாதுகாப்புஅமைச்சின் அனுமதியுடன் பதிவு | சுத்திகரிப்பு சேவைப் பதிவு |
| பெறுகைப்பிணை | ரூ 300,000 | ரூ 200,000 |

1 பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

2. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் வடக்குமாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்

3 ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 – பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4 ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை **மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம், சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ் முகவரியிலே வேலை நாட்களில் 0900 மணி தொடக்கம் 1500 மணி வரை பரிசீலிக்க முடியும்.

5 ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை **மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம், சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் வேலை நாட்களில் 20 மே 2020 ஆம் திகதி தொடக்கம் 08 யூன் 2020 ஆம் திகதி வரை 0900 மணி தொடக்கம் 1500 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக ரூபா.12,500 இனை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

6 பெறுகை ஆவணங்கள் 10 யூன் 2020 ஆம் திகதி 1000 மணிக்கு முன்பதாக **மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம், சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

**வைத்திய கலாநிதி. ஆ.கேதீஸ்வரன்.**

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (பெரிது),**

**வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**

**சுகாதாரக்கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம், 40000.**

தொலைபேசி இலக்கம் 021-222-0811, 021-222-0812 தொலைநகல்: 021-221-7905, 021-222-0818 மின்னஞ்சல்:capdhsnp@gmail.com